©
தமிழ்நாடு அரசு
2018

பதிவெண்: எம்.

திருவள்ளூர் மாவட்ட அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது

திருவள்ளூர், டிசம்பர் 1, 2018 [எண் 8

கார்த்திகை 15, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049

திருத்தணி நகராட்சி
06 DEC 2018
திருவள்ளூர் மாவட்டம்

பொருளடக்கம்

	பக்கம்
உள்ளாட்சித் துறை அறிவிக்கை	41-52

உள்ளாட்சித் துறை அறிவிக்கை

திருவள்ளூர்மாவட்டம், திருத்தணி நகராட்சி

சொத்துவரி திருத்தம் – 2018 குறித்த அறிவிக்கை

(ந.க.எண்.1607/2018/அ1, நாள்.12.10.2018)

அரசாணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.27.07.2018ன்படி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம 1920, அட்டவணை 4ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் திருத்தணி நகராட்சி சொத்துவரியினை 01.04.2018 முதல் பொது சீராய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட 2 அரசாணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/ஆர்1, நாள்.20.08.208 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் அடிப்படையில் இந்நகராட்சியில் உள்ள 239 சாலைகள் மற்றும் தெருக்கள் A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாக பிரிக்கப்பட்டு அம்மண்டலங்களுக்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு கீழ்க்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டு திருத்தணி நகராட்சி மன்ற தீர்மானம் எண்.173, நாள்.07.09.2018 ன்படி அதற்கான மன்ற ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது.

வ.எண்	மண்டலம்	சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு	
		தற்போதைய மதிப்பு	உயர்த்தப்பட்டுள்ள மதிப்பு
1	A- Zone மண்டலம்	ரூ.1.00	ரூ.1.50
2	B -Zone மண்டலம்	ரூ.0.75	ரூ.1.15
3	C- Zone மண்டலம்	ரூ.0.60	ரூ.0.90

A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள திருத்தணி நகராட்சியின் தெருக்கள் / சாலைகளின் பட்டியலில் உள்ளவாறு உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள அடிப்படை மதிப்பு போன்ற விவரங்கள் திருத்தணி நகராட்சி இணையதள முகவரி (http://123.63.242.116/thiruthani) மற்றும் நகராட்சி அறிவிப்பு பலகையில் பார்வையிட்டும் தெரிந்து கொள்ளலாம். கூடுதல் விவரங்கள் நகராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் அலுவலக வேலை நேரத்தில் நேரடியாக கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

திருத்தணி நகராட்சியில் உள்ள 239 சாலைகள் / தெருக்கள் A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது அல்லது அம்மண்டலங்களுக்கான அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்து வசூலிக்க கூட்ட தீர்மானத்தின்படி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒம்.....

திருத்தணி,
2018 நவம்பர் 13.

ஆணையர்(பொ),
திருத்தணி நகராட்சி.

திருமழிசை பேரூராட்சி

திருவள்ளூர் மாவட்டம் நடைமுறையிலுள்ள குடிநீர் வழங்கல் குறித்த துணை விதிகளுக்கான திருத்தங்கள் பற்றிய அறிவிக்கை.

(ந.க.எண்.142/2018/அ1,, நாள்.24.07.2018)

1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 130, 131 (1) (2) (3), 132, 132(அ), 134, 135, 306(3) (சி) (டி) (இ) (எப்) (ஜி) (எச்) (ஐ) 308 மற்றும் 309 ஆம் பிரிவுகளின்படி பேரூராட்சி குடிநீர் திட்டத்திலிருந்து வீடுகளுக்கும் மற்றும் இதர இனங்களுக்கும் குடிநீர் இணைப்பு வழங்குதல், குடிநீர் இணைப்பில் மாற்றம், பழுதுபார்த்தல் மற்றும் குடிநீர் இணைப்புகளை சரியான முறையில் வைத்திருத்தல் ஆகியவற்றில் கீழ்குறிப்பிடும் விதிகளுக்கான திருத்தங்கள்.

பாகம்–1

1. 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 131 (1) அல்லது 132 ஆவது பிரிவின் திருத்தத்தின் படியும் குடிநீர் விநியோகத்திற்காக இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி ''அ'' படிவத்தில் மனுதாரர் அதாவது கட்டத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் வீட்டு உரிமையாளரிடமிருந்து எழுத்து மூலம் ஒப்புதல் கடிதம் பெற்று படிவம் ''அ'' மற்றும் மதிப்பீடு தயார் செய்து பதிவுக் கட்டணம் ரூ.100 (ரூபாய் நூறு மட்டும்) செலுத்தி செயல் அலுவலருக்கு இணைப்பு கோரும் பதிவு படிவம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். பதிவுக் கட்டணம் செலுத்தி பதிவு செய்த நாள் கணக்கிட்டு முன்னுரிமைப் பட்டியல் தயாரித்து அதனடிப்படையில் குடிநீர் விநியோக குழாய் இணைப்பு வழங்கப்படும். மேலும் குறிப்பிடப்படும் முதல் பாக கட்டணம் மற்றும் மதிப்பீட்டுக் கட்டணங்களை பேரூராட்சியில் செலுத்தி உத்தரவு பெற்று குடிநீர் குழாய் இணைப்பிற்கான பணிகள் துவங்கப்பட வேண்டும்.

(அ) குடிநீர் இணைப்பிற்கான மொத்த மதிப்பீட்டில் 10 சதவீத செண்டேஜ் கட்டணம் ரூ.1000–க்கு குறையாமல் வசூலிக்கப்படும்.

(ஆ) அரசு கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பு வேலைகளுக்கு வேலைகளுக்கான தொகை மற்றும் மேற்படி வேலையை மேற்பார்வை செய்வதற்கான கட்டணம் ஆகியவற்றை முன்பணமாக செலுத்த வேண்டிய அவசியமில்லை. ஆனால் வேலை முடிவுற்ற ஒரு வார காலத்திற்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(இ) மேற்கண்ட கட்டணங்களில் குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லையெனில் முதல்பாக கட்டணம் தவிர இதர கட்டணங்கள் மீள வழங்கப்படமாட்டாது அல்லது செலுத்திய தொகைக்கான வட்டி ஏதும் கணக்கீடு செய்து வழங்கப்படமாட்டாது.

(ஈ) குழாய் இணைப்பு கோரும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இணைப்பிற்கும் அடியிற்கண்ட முதல் பாக டேவணிக் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

வீட்டு உபயோக இணைப்புக்கள் (1–க்கு)	– ரூ.5000/–
வணிக உபயோக இணைப்புக்கள் (1–க்கு)	– ரூ.7500/–

2. பேரூராட்சியில் அளவுமானி கட்டண அடிப்படையில் மட்டுமே அனைத்து வீட்டிணைப்புகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படும். வீட்டு உபயோகத்திற்கு மட்டும் குடிநீர் உபயோகப்படுத்தும் இணைப்புகளுக்கு குடிநீர் கட்டணம் பிரிவு 3(ஆ) (1)ல் உள்ளபடி வசூலிக்கப்படும், அந்த கட்டணத்தில் அளிக்கப்படும் குடிநீர் வீட்டு உபயோகம் அல்லாத பிற காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டாலோ அல்லது அவ்வாறு உபயோகப்படுத்தப்படுவதற்கு உண்டான வாய்ப்பு இருப்பதாக செயல் அலுவலர் நம்பும்படியான காரணங்கள் இருந்தாலோ பிரிவு 3(அ) 3(ஆ) (ii)(iii) –ல் கண்டுள்ளபடி கூடுதல் குடிநீர் கட்டணம் செலுத்துமாறு உத்தரவிடலாம். அவ்வித உத்தரவை ஏற்றுக்கொள்ள மறுத்தால் வீட்டு குடிநீர் இணைப்பை துணை விதிகளில் உள்ள பிரிவுகளின் படி துண்டித்து விடலாம்.